- குருவானது வினையறுக்க தூண்டவே ஒழிய ஆசைக்கு துணை போக அல்ல...
- உயிர் உடலுக்குள் உள்ள வரை
  துன்பம் இருக்கும் கடைசி வரை!
  உணர்ந்து வாழ்ந்தால் என்றுமே
  இயல்பு நிலை.
- மௌனத்தில் விழிப்பு நிலை !!
  அமைதி நிலையில் இயல்பு நிலை !!!
- அவனின்றி நீ இல்லை , நீ என்று ஒன்றுமில்லை,அதுவே
  அனைத்துமாய் !!!
- இது இதுவாக இருந்தால் எங்கும் குறையே தெரியும்.
- இது அதுவாக இருந்தால் எங்கும் நிறைவே தெரியும் !!!
- உயிரை உணருங்கள் !!!
- இறையாய் மலருங்கள் !!!

# சரணாகதி

**இறையே அணுவாய்**

**அணுவே உயிராய்**

**எங்கும் நிறைவாய் இறையே** !

**இறையே குருவாய்**

**இறையே அறிவாய்**

**என்னுள் மலர்வாய் இறையே** !

**நான் என்னும் அகந்தை நீக்கி,**

**நீயே நானாக,உலக உயிர்களுக்கு**

**தொண்டாற்றி, நிறைவு செய்ய**

**அருள் புரிவாய்** ! **துணை புரிவாய்** !

# மூல உரை

இது இங்கிருந்து வந்தது ...

இங்கேயே வைக்கப் படுகின்றது.

உனக்குள் விதையை
விதைப்பதற்காக அல்ல,

உனக்குள் இருக்கும் விதையை
மலர வைப்பதற்காக!

அறியாமை நீங்கி விழிப்பு நிலை
அடைவதற்காக!

உனக்கு போதிக்க தேவை
இல்லை !

நினைவு படுத்துவதற்காக !



- துணை தேடாதே !!! தனியாய் இருந்து பழகு !
- உன்னை மயக்க உனது தேவைகளும், எதிர்பார்ப்புகளும் போதுமானது. இவை இரண்டும் உன்னிடம் இல்லை என்றால் யாராலும் உன்னை அசைக்க முடியாது.
- ஏதாவது ஒன்றின் மீது பற்று வைத்து சுகம் காண்பவன் மீது கோபம் கொள்ளாது பரிதாபப்படுங்கள்.ஏனென்றால் அந்த பற்றினால் தான் உயிர் வாழ்கின்றான்.
- நீ வெளியில் பற்றாமல் இருந்தால், உயிர் உடலைப் பற்றாமல் விடுதலை ஆகிவிடும்.
- உன் பதிவுகளை அழிக்காமல் குற்றங்கள் குறையாது! உனது நல்ல, தீய செயல்கள் பதிவுகளின் வெளிப்பாடே !!!
- பாவத்தின் பரிகாரம் பய பக்தி ஆகும்.

- உடல் , உயிர் , மனம் , பதிவு , எண்ணம் , அறிவு இதில் நீ யார் ? என்று ஆராய்ச்சி செய். ஆராய்ச்சி செய்தால் நீ நான் என்பது காணாமல் போகும்.
- கோழி கூட தன் குஞ்சுகளை வளர்ந்த பிறகு விரட்டி விடுகிறது சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக! .ஆனால் இங்கே தன் பிள்ளைகள் தன்னை சுற்றியே வர வேண்டும் என்று நினைக்கின்றான்.
- உன்னை பாதுகாக்க உனக்குள்ளே அனைத்தும் இருக்கிறது.
- யாரும் யாருக்கும் சொந்தம் இல்லை !!!
  யாரை நம்பியும் நீ இங்கு வரவில்லை!
  பேச்சை குறைத்து மூச்சைக் கவனி!!!
  மூச்சிலே உனது ஜாதகம்!!!
  தனியாகவந்தாய் ! தனியாக போவாய் !!



மாயையிலிருந்து விடுதலை பெறுவதற்காக!

வாழ்வு உண்மை

என்ற கூற்றை உடைப்பதற்காக!

இயல்பற்ற நிலையிலிருந்து இயல்பு

நிலைக்கு திரும்பி வருவதற்காக !

இது உன்னை உணர வைக்கும் !

இறை உணர்வை மலர வைக்கும் !

என்றும் பேரானந்தம் .....

- **இறை தொண்டன்**

- மனிதனின் நோக்கமே இயல்பு நிலை உணர்வதே !
- இயல்பு நிலையே இறை உணர்வின் ஆரம்பம்.
- உன்னை உணரும் போதே உலகம் உன் வசமாகும்.
- பகுத்தறிவின் முடிவில் இறையறிவின் ஆரம்பம்.
- பகுத்துப்பார்த்து தெளிவு பெறுவது பகுத்தறிவானால், ஊடுறுவி உள்ளதை உணர்வது இறையறிவாகும்.
- புலன் இயக்கம் வாழ்க்கை அல்ல. புலன் ஒடுக்கமே வாழ்க்கை.
- நீ நினைக்கும் வாழ்க்கை உடல் இருக்கும் வரை. உடல் மாயை என்றால் நீ நினைக்கும் வாழ்க்கையும் மாயை தானே?



- தொழிலுக்குள் ஆன்மீகமும், ஆன்மீகத்திற்குள் தொழிலும் கரை சேராது !!!
- அனைத்து துன்பங்களுக்கும் எதிர்பார்ப்பே காரணம்!!! அதன் அழிவில் உனது உயர்வு!!!
- உன்னிடம் ஒருவர் எந்த வகையிலாவது சிறிதளவு மயங்கினாலும் நீ பாவத்தைச் சேர்ப்பதாக அர்த்தம்.
- உன்னிடம் ஒருவர் எந்த வகையிலாவது தன்னில் சிறிது விழிப்பு நிலை அடைந்தாலும் நீ புண்ணியத்தைச் சேர்ப்பதாக அர்த்தம்.
- உனது ஒவ்வொரு அசைவும் பிறர்க்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.
- உன்னை புகழும்போதும், மயங்காது விழிப்பு நிலையில் இருக்க வேண்டும்.

- சரியாக வாழ்ந்தால் யாரும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்க தேவை இல்லை.
- விரதம் உடலுக்கு ஓய்வையும் பலத்தையும் கொடுக்கும்.
- நீ உண்ணும் உணவைப் பொறுத்தே உனது உடல் நலம்.
- நீ எண்ணும் எண்ணத்தைப் பொறுத்தே உனது மன நலம்.
- மலக்குடலில் கடுகளவு மலம் இருந்தாலும் தியானம் கை கூடாது.
- தியானிக்க தியானிக்க ஜாதகம் விலகும், எத்திசையும் கை கூடும்.
- 48 நாட்கள் விரதம் இருந்து இயங்குவதை விட 48 மணி நேரம் மௌனம் இருந்து இயங்காமல் இருந்தால் உன்னை உணர்ந்து உண்மையை உணர்த்தி விடுவாய்!!!
- விவசாயம் உனக்காக! வியாபாரத்திற்கு அல்ல !
- உற்பத்தி செய்ய கூடாது! உற்பத்தி ஆக வேண்டும்! ஆகும்!!



- பழக்கத்தை போதிப்பது தாய் தந்தையர். ஒழுக்கத்தை போதிப்பது குருவானவர்.
- ஒழுக்கம் என்பது ஆசை அற்ற நிலையே ஆகும்.
- ஆசைபடு, பேராசைபடாதே என்பதும் ஒழுக்கமின்மையே ஆகும்.
- ஆசைபடுவதே ஒழுக்கமின்மை என்றாகும் போது ஆசைபடலாம் ஆனால் பேராசைபடக்கூடாது என்று கூறுவது, ஆசைபடாமல் இருக்கமுடியாது என்ற நிலையில் இருந்து தப்பிப்பதற்கான சுயநல சூழ்ச்சியாகும்.
- நான் இல்லாவிட்டால் என் குடும்பம் நாசமாகிவிடும் என்று கூறுவது அறியாமையே ஆகும். நீ இல்லை என்றாலும் ஆற்றலுடன் ஓங்கி நிற்கும் உனது குடும்பம் என்பதை மறந்து விடாதே!

- மனதால் உனக்குள் கட்டிபோடும் அனைத்தும் ஒரு நாள் தவிடுபொடியாகும்.
- இயற்கையை துய்ப்பது வாழ்க்கை அல்ல, இயற்கையை உணர்வதே வாழ்க்கை.
- உலகம் என்பது உனது இல்லமாகும். அதில் வாழும் மனிதர்களே உனது உறவுகளாகும்.
  உன்னை நீ உணரும் போதே உலகத்தை உணர முடியும்.
- உற்றுப்பார் உன்னை ! உலகத்தை ! நிறைகள் வெளியே தெரியும். குறைகள் உன்னிடம் தெரியும்.
- உனக்கு அறிவு இருக்கிறதா? என்று கூறுவது உனது அறியாமையே ஆகும். ஏனெனில் இது அறிவாலே பிறந்து அறிவாலே வளர்கிறது.



- ஒரு பொய்யை சொல்லி ஒரு நல்லதை நடத்த வேண்டிய அவசியமில்லை. அப்படியானால் ஆரம்பமே சரியில்லை என்று அர்த்தம்.கேட்காமல் உதவி செய்யாதே! உதவியை நாடும் அளவிற்கு உன்னை வைத்துக் கொள்ளாதே !!!
- உதவி பெறுவது உன்னை மறைமுகமாக அடமானம் வைக்கும் செயலாகும்.
- பதிவுகளால் மயக்கம் எனும் அறியாமை தன்மையில் இருப்பவனை ஆன்மிகம் ஆரோக்கியம் என்று சொல்லி தொழில் நடத்துவது பாவத்தை மேலும் மேலும் சேர்ப்பதாகும்.
- விட்டுக்கொடுத்துக் கொண்டே போவதை விட புரிய வைப்பதும் உணர வைப்பதும் சிறப்பு !!!
- விட்டுக்கொடுத்துக் கொண்டே போனாலும் ஒரு நாள் உனக்குள் அழுத்தமாகும்.

- நீ வியாபாரம் செய்வது மனிதனிடத்தில் அல்ல இறைவனிடத்தில் என்பதை மறந்து விடாதே !!!
- பக்தி வெளி தோற்றத்தில் இல்லை ! முக்தி புலன் இயக்கத்தில் இல்லை.
- ஏமாற்றிவிட்டோம் என்று கர்வம் கொள்ளாதே. நீ ஏமாற்றியது மனிதனை அல்ல, தெய்வத்தை !!!
- அது மீண்டும் சுழற்றி அடிக்கும் போது, நீ காணாமல் போய் விடுவாய் என்பதையும் மறந்து விடாதே !!!
- உன்னிடம் ஏமாறுவது போல் உன்னை சோதிக்கிறது என்பதையும் மறந்து விடாதே !!!
- தன்னிடம் வரும் நோயாளியை மீண்டும் தன்னிடம் வாராத அளவிற்கு பார்த்துக் கொள்வரே நல்ல மருத்துவர், உயர்ந்த மருத்துவர்.



- "நீ இல்லாமல் நான் இல்லை" என்பது தெய்வத்திற்கு மட்டுமே பொருந்தும்.
- "உனக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்று கூறுவது புலன் உணர்ச்சிக்காக அல்ல, இறை உணர்விற்காக....
- "தெய்வம் போல வந்து என்னை காப்பாத்துனீங்க" என்று கூறுவது ஆசையை அனுபவிக்க முடியாமல் போய் விடுமோ என்ற "பீதியே" ஆகும்.
- உணர முயலும் போதே தெய்வம் உன்னை காப்பாற்றும்.
- நீ வேறு தெய்வம் வேறு அல்ல,

- உணர்ச்சி நிலையில் பகுத்தறிவே தெய்வம், உணர்வு நிலையில் இறையறிவே தெய்வம் !
- அறிவு இயங்கினால் அகந்தை !
- அகந்தை நீங்கினால் குழந்தை ! ! !
- இறையே! என்னை உணர்ந்ததால்,உன்னை உணர்ந்தேன், உன்னை உணர்ந்ததால் என்னை இழந்தேன்.
- "பற்று" என்னை பற்றிக்கொள்ளாது இருப்பதற்கு உன்னை பற்றிக்கொண்டேன் இறையே !
- பற்றற்ற நிலையே இறை நிலையே ! என்றாயினும், உன்னை பற்றாமல் இருக்க முடியலயே !
- அடையாளத்தை விடும்போதே அதை அடையமுடியும்.
- பற்று பாசத்திற்கே அடையாளம் இருக்கும் அடையாளம் அன்புக்கு இருக்காது.



- பகுத்தறிவால் தீர்ப்பு கூறலாம். இறை அறிவால் மௌனமே தீர்ப்பு, ஏனென்றால் குற்றவாளியும் தெய்வம் தானே!
- நல்ல சக்தியாகவும் தீய சக்தியாகவும் இருப்பதும் இறையே! இது இறையின் திருவிளையாட்டு.
- ஆடை துறவே அடையாளத்தின் முடிவு. எந்த அடையாளமும் இல்லாமல் நீ இங்கு வாழ முடியுமானால் நீ தான் ஞானி!
- தெய்வத்தை தவிர யாரிடமும் கை ஏந்தாதே. தெய்வமும் நீ தான் என்பதையும் மறந்து விடாதே.
- சேவைக்காக வியாபாரம் என்று கூறி பாவத்தைச் சேர்க்காதே.
- உன்னிடம் யாரும் எதுவும் கேட்க்காத பொழுது நீயாக மூக்கை நுழைக்காதே!!! நல்லது செய்கிறேன் என்று சொல்லி அணு அளவும் லாபம் பார்க்காதே.

- பகுத்தறிவு சதை போன்றது. இறையறிவு விதை போன்றது.
- பகுத்தறிவு பதிவுகளை அழிக்கவே ஒழிய வேடிக்கை பார்க்கவும், விவாதம் பண்ணவும் அல்ல.
- பகுத்தறிவானது பதுக்காது, பாதுகாக்காது, ஒருவரை அடிமை ஆக்காது, மயக்காது, ஆலோசனை கூறாது, அதிகாரம் செய்யாது, ஆணவம் கொள்ளாது, உயர்வு தாழ்வு பார்க்காது, வியாபாரம் செய்து ஏமாற்றாது, போராடாது, தலைமை தாங்காது, தலைமைக்கு கீழ் நிற்காது .
- பகுத்தறிவு நீயும் நானும் ஒன்று என உணர்ந்து வாழக்கூடியது. இறையாய் மலரக் கூடியது.பகுத்தறிவு அறியாமையை போக்கும். விழிப்பு நிலையில் இருக்க செய்யும்



- மதம் மாற்றுவது பாவத்திற்கு உரியது, மதம் மாறுவது பரிதாபத்திற்குரியது.
- பஞ்சபூதத்தை துய்க்க உரிமை உண்டு. பஞ்சபூதத்தை விற்க உரிமை இல்லை.
- தெய்வத்தை தேடிக்கொண்டே காலத்தை வீணடிக்காதே ! காலத்தை வீணடித்துக் கொண்டே தெய்வத்தை தேடாமல் இருக்காதே !
- தேடினால் கிடைக்காது........... உடல் மறைவதற்குள் உணர்ந்து விடு உண்மையை !!!
- குடும்பம் குட்டி என்று குண்டான் சட்டிக்குள் குதிரை ஓட்டாதே ! வெளியே வந்து பார் ! என்னமாய் விடுதலை உனக்கே !
- மௌனம் – வினைக்கான விடுதலை
- தியானம் – உணர்வுக்கான விடுதலை

- மரணம் – உயிர்க்கான விடுதலை
- சமாதி – பிறவிக்கான விடுதலை
- உடலை பாதுகாப்பதே இறை வழிபாடு , கருணை கலந்த செயலே இறை வெளிப்பாடு.
- இனம், மதம், மொழி, நான் எனும் அடையாளத்தை விடும் போதே இறைஎன்னும் பரந்த நிலைக்குள் செல்ல தகுதி ஆகின்றோம்.
- தற்போது உலகமே ஒரு வியாபாரமயமே, அதில் லாபம் , வளர்ச்சி, உணர்ச்சி இருக்குமே ஒழிய மனித உணர்வுக்கு இடம் இல்லை.
- நான் ஒரு பகுத்தறிவு விலங்கு. நான் என்னை உணரும் போதே மனிதனாகிறேன்.
- நிரந்தர மனிதனாவது எப்போது ? அடையாளம் அனைத்தையும் விடும்போது…



- இவ்வுலகில் அடையாளம் இல்லாமல் வாழ முடியாது.
- அவ்வுலகில் அடையாளத்தை அழிக்காமல் இறையை நெருங்க முடியாது.
- துறவு இல்லாத உறவு கசக்கும்,துறவு கண்ட உறவு இனிக்கும்.
- துறவறம் இல்லாத இல்லறமும் இல்லை, இல்லறம் காணாத துறவறமும் இல்லை.
- இல்லறம் விருப்பு வெறுப்பு உள்ள நிலை துறவறம் விருப்பு வெறுப்பு அற்ற நிலை.
- பாசம் பற்றுகளினால் மகிழ்ச்சியாய் இருப்பது போல் தோன்றினாலும் நிறைவு இருக்காது.
- ஒன்றை மறக்கும் பொழுதோ செயல் செய்ய மறுக்கும் பொழுதோ துறவறமாகிறாய்.
- ஐம்புலன் வழி மயங்கினால் இல்லறம், ஐம்புலன் வழி உணர்ந்தால் துறவறம்.

- உறவுகளை பகைக்காதே, அதே நேரத்தில் உறவுகளை உள் வாங்காதே!!!
- நல்லது கெட்டது பகுத்தறிவது மட்டும் பகுத்தறிவு அல்ல.
- பகுத்தறிவானது இயற்கையோடு ஒத்து வாழும், குறைகள் காணாது, நிறைகளை மட்டும் கண்டு நிறைவோடு வாழும்.
- புலன்களில் இயங்கினாலும் விழிப்பு நிலை கொண்டதாகவே இருக்கும்.
- பகுத்தறிவானது விஞ்ஞானத்திலும் மெய்ஞானம் காணும். விண்ணையும் மண்ணையும் ஒன்றாகவே காணும்.
- பகுத்தறிவு மனித இயல்பறிவு. முழுமையான பகுத்தறிவின் மலர்ச்சியே மனிதன்.
- பகுத்தறிவின் முடிவில் இறையறிவின் ஆரம்பம்.



- புலனை இயக்குவதால் மனிதன் ஆகவில்லை, புலனை ஒடுக்குவதால் மனிதன் ஆகின்றான்.
- உன்னை உன்னால் அடக்க முடியாத பொழுது, உலகத்தை உன்னால் எப்படி அடக்க முடியும்,
- உலகத்தை அடக்க தேவை இல்லை, நீ அடங்கினாலே உலகம் அடங்கிவிடும்.
- நீ இங்கு ஏதாவது ஒன்றில் பற்று கொள்ள விரும்பினால், பற்றிக்கொள்ளாத பற்றற்ற பொருளாக இருக்கட்டும்.
- நடையில் பகட்டும், உடையில் செழிப்பும் இருந்தால் விழிப்பு இல்லாத நிலைக்கே தள்ளப்படும்.

- உனது உழைப்பு என்பது உனது ஆற்றலின் விரயமானது.
- உனது ஆற்றலின் விரயமானது உழைப்பிற்கான வரவானது.
- வரவையும் ஆற்றலையும் எடைபோட்டு பார்த்தால் வரவு கழிவானது , கீழானது.ஆற்றல் மேலானது.
- உனது ஆற்றலின் வெளிப்பாடு என்பது எக்காலத்திலும் “பொறுமையே” ஆகும் . அதுவே உனது தரமும் ஆகும்.
- எவ்வளவு தான் பொறுப்பது அதற்கு ஒரு அளவு இல்லையா ? என்று கூறுவது உன்னிடத்தில் ஆற்றலின் வறுமையை காட்டுவதாகும்.
- நீ ஆற்றல் மிக்கவன் என்பதை ஒவ்வொரு நொடியிலும் உணர்ந்து கொண்டே இரு.



- “உன் மீது அன்பு செலுத்துகிறேன்” என்று கூறுவது உன்னை நீயே ஏமாற்றிக் கொள்வது.ஏனெனில் அன்பு ஒருவரிடம் மட்டும் குவியாது. அது சுயநலம் இல்லாதது.
  பரந்த நிலையானது.
- கடந்த காலத்தை நினைத்துக் கொண்டிருப்பது முட்டாள் தனமானது. எதிர் காலத்தை நினைத்துக் கொண்டிருப்பது கோழைத்தனமானது.நிகழ் காலத்தில் நினைவை வைப்பது நிஜமானது, உணர்வானது.பதிவுகள் இல்லை எனில் முக்காலமும் இல்லை.
- உறவுக்குள் உறவாடிக் கொண்டே துறவாகும் சூட்சுமத்தை கற்றுக் கொள்.

- புலன் வழி வாசம், உயிர் சக்தி நாசம்.
- நீ சிவம், உனது சொத்தே உயிர் சக்தி எனும் விந்து சக்தி.
- விந்து விரயம் வம்சம் துவம்சம்.
- விந்து விரயம் கடும் நோய்க்கு அடித்தளம். இது இரு பாலருக்கும் பொருந்தும்.
- விந்து சக்தி இல்லை என்றால் இல்லறமும் இல்லைதுறவறமும் இல்லை.
- மஹா சக்தியே உயிர்சக்தி என்னும் விந்து சக்தி. **விஞ்ஞானத்துக்கு விந்து சக்தி மெய்ஞானத்துக்கு உயிர் சக்தி**. இது அறிவியலுக்கு அடங்காது , ஆன்மீகத்துக்கு அடங்கும்.
- விந்துவின் தரம் உனது தாய் தந்தை முன்னோர்களை பொறுத்தே அமைவது.
- உன்னை தரமாக்கு உலகத்திற்கு உரமாக்கு.



- எந்த ஒன்றினாலும் உனது ஆற்றலை வறுமையாக்க இடம் தராதே.
- புலன் மயக்கம் ஆற்றல் விரயம்.
- விந்து விட்டவன் நொந்து கெட்டான்.
- சுவைக்கு அடிமையானவன் தெய்வத்திடம் நெருங்க மாட்டான்.
- தன் ஆசைகளை அனுபவிக்க பகுத்தறிவை போர்வையாக பயன்படுத்திக்கொள்வான்.
- கடவுள் வழிபாடு தினமும் செய்தாலும் நீ வேறு கடவுள் வேறு இல்லை.
- நீ தான் கடவுள் என ஒவ்வொரு நொடியிலும் உணர்த்திக்கொண்டே இருக்கிறது உனக்குள்ளே ..
- உனக்கும் கடவுளுக்கும் இடைவெளி ஏதும் இல்லை, பதிவுகள் இல்லாதவரை..

- உனக்குள் எண்ணற்ற பதிவுகள் வினையாற்றிக் கொண்டிருக்கிறது.அதுவே உனது வாழ்க்கையில் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.
- "விழிப்பு நிலை" எனும் ஆயுதத்தால் வினையை வேரறுக்க துவங்கிவிடு.
  உடலே வினையின் விளையாட்டு.....
- வினையுடன் விளையாடு.
- உடல் உன்னை கடவுளிடம் இணைக்கும் தெய்வீக வாகனம். அந்த வாகனத்தை பழுதாகாமல் பார்த்துக் கொள்.
- அதுவே உனது முதல் கடமை.
  வாகனம் பழுதானால் பயணம் தொடராது.பிறவி தொடர் அறுபடாது.
- வெந்ததை தின்று உடலை கெடுக்காதே,
  நொந்த பின் அதை நினைத்து வருந்தாதே...



- உனக்கு எதிரி மனிதனாக இருக்க கூடாது. உனக்குள் இருக்கும் பதிவுகளாக இருக்கட்டும். அதை அழிக்க முற்படு! அடைவாய் சிறப்போடு!
- மனம் விரியும் போதே உன் முகம் மலர்கின்றது. மனம் சுருங்கும் போது உன் இதயம் புண்ணாகின்றது.
- உலகில் அதிசயமாய் எதையும் பார்க்க தேவையில்லை!
  உடலுக்குள் நடக்கும் ரகசியத்தை அறிய உனக்கு நேரம் இல்லை.
- வேகமாய் எங்கு செல்கின்றாய் ? நீ எங்கு சென்றாலும் தடையும் இருக்கும், தடுப்பும் இருக்கும்.
- தடுப்பு இல்லா நிலை நோக்கி தடையில்லாமல் செல்! அது வெளியில் இல்லை, உனக்குள்ளே!
- சிவன் சொத்து குல நாசம்.

- பகுத்தறிவே பாதுகாக்கும் என்று நினைப்பது வினையை தேடிக்கொள்வது.
- இயற்கையே பாதுகாக்கும் என்று நினைப்பது வினையை அறுப்பது.
- புலன் அறிவு, பகுத்தறிவு, இறை அறிவு இதில் நீ எந்த அறிவு?
- இறையே உயிராக, இறையே உடலாக, இறையே மனமாக, இறையே அறிவாக எங்கும் "**இருப்பாய் இருக்கும்**" இறையே!
- கடவுள் இல்லை என்று பேச வைப்பதும், கடவுள் இருக்கு என்று பேச வைப்பதும், கடவுள் தான்.
- உடல் இருக்கும் வரை நீ நிரந்தரமானவன்.
  உன்னை இயக்கும் அவனோ என்றும் நிரந்தரமானவன்.



- கடவுள் பார்வை கனப் பொழுதிலும் உண்டு. மீண்டு எழ வாய்ப்பும் உண்டு.
- நீ தான் கடவுள் என்றால் ஏற்க மறுக்கின்றாய்! ஏனென்றால் புலன் வழி சுவைகள் விடுபட்டு விடுமோ என்பதினால்!
- இதானால் உனக்கும் கடவுளுக்கும் இடைவெளியை நீயே ஏற்படுத்திக் கொள்கின்றாய் !
- ஆசையை அறுக்க துணிவில்லாத போது மீசையை முறுக்கி என்ன பிரயோஜனம்?
- ஆண்மை என்பது புலன் இயக்கத்திலே இல்லை. புலன் ஒடுக்கத்திலே தான் உள்ளது.
- மலர்களின் வாசனையில் கூட மயங்கி விடலாம், ஆனால் வெந்த உணவுகளின் வாசனையில் மயங்குவது

13

- நோயாளிகளை பார்க்க செல்லும் போது பழங்களை தானே கொண்டு செல்கின்றோம். வெந்த உணவுகளையா கொண்டு செல்கின்றோம்?
- பழங்களே உன்னை பலமாக்கும். என்றும் உன்னை தரமாக்கும்.
- மரணம் ஒர் மங்களம். உடல் எனும் கூட்டில் உயிருக்கான விடுதலை.
- மரணத்தில் அழுவது, மரணித்தவரின் ஆத்மா சாந்தி அடைவதை தடுக்கும் செயலாகும்.இயற்கைக்கு முரணாகும்.
- பிறப்பும் இறப்பும் தெய்வத்தின் கையில்...
- போதனைகளை ஆராய்ச்சி செய். போதிப்பவனை ஆராயாதே. ஆராய்ச்சியில் போதிப்பவனும் அடங்குவான்.
- தற்போது விஞ்ஞானம் இல்லாமல் வாழ முடியாது.
- விவசாயம் இல்லாமல் ஆன்மிகம் மலராது.

14

- உன் குழந்தையை குறை சொல்வது, உன் தரமில்லா தரத்தை பறை சாற்றுவது. உனது பதிவே குழந்தை எனும் விளைவே!
- ஒவ்வொரு நொடியிலும் விழிப்பு நிலையில் இருந்தால் உலகம் சொர்க்கம். மயக்க நிலையில் இருந்தால் நரகம்.
- விலங்கு செய்வதை தான் நீயும் செய்கிறாய். நீ பதுக்குவதை தவிர,
- பகுத்தறிவால் அறியாமையை அடிமையாக்குகிறாய், இதுவும் அறியாமையே.
  அறியாமை தன்னை உணர்ந்தவுடன் மாயமாய் மறைந்து விடுகின்றாய்!!!
- விஞ்ஞானம் எதை வேண்டுமானாலும் செய்யும். ஆனால் வயிற்றுக்குள் போடும் உணவை ரத்தமாக மாற்றும் செயலை செய்ய முடியாது.
- வினை அறுக்கும் ரகசியம் எதிர்வினை காட்டாமல் இருப்பதே.